**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(ஜுன் 22-ம் தேதி முதல் ஜுன் 26-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (17.6.16- 20.6.16)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 2.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 31 - 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 - 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 - 5 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (07:00 LM T) | 59 - 63 |
| ஒப்புஈரப்பதம்(சதவீதம்) (14:00 LM T) | 46 - 59 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2 - 6 |
| காற்றின் திசை (டிகிரி) | 320 - 360 |

26.6.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் - 1<br>22.6.16 | நாள் - 2<br>23.6.16 | நாள் - 3<br>24.6.16 | நாள் - 4<br>25.6.16 | நாள் - 5<br>26.6.16 |
| மழை (மி.மீ.) | 3 | 1 | 2 | 3 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 34 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 26 | 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 55- 63 | 55- 63 | 55- 63 | 55- 63 | 55- 63 |
| காற்றின் வேகம் (கி.மீ. , மணி) மற்றும் திசை | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு | 3/ வடமேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், மிக இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர், சாகுபடி சூழல் | பருவம், சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| மிளகாய் | காய்க்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையில் மிளகாயில் காய்த்துளைப்பானின் தாக்குதல் தென்படுகிறது. இப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்க இனக்கவர்ச்சிப்பொறி 12, எக்டர் என்ற அளவில் அமைக்கவும். பாதிக்கப்பட்ட காய்களில் காணப்படும் புழுக்களை சேகரித்து அழிக்கவும். தாக்குதல் தீவிரமாக இருந்தால் குளோர்பைரிபாஸ் 3 மி.லி./லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.<br><br>மிளகாயில் இலைப்பேன் மற்றும் அசுவினி போன்ற பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 2 மி.லி., லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தக்காளி (இறவை) | பூக்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலை தக்காளியில் வெள்ளைஈயின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30% EC 1 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை (இறவை) | தார் உருவாகும் பருவம் | வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். |
| கரும்பு (இறவை) | துரித வளர்ச்சி பருவம் | கரும்பு நட்ட 210வது நாள் பசும்கரும்பு தோகைகளை கொண்டு இரண்டு வரிசைகளை சாயாதவாறு பின்னவேண்டும். |

குறுஞ்செய்தி- மழை ஜுன் *22- 26*: 3, 1, 2, 3& 2 மி.மீ. மிளகாய்- இலைப்பேன் மற்றும் அசுவினி -தாக்குதலைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 2 மி.லி./ லிட்டர் என்ற அளவில்தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி